**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 19/2024 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | சிவக்குமார் |
| Father Name | : | ராமசாமி |
| Village | : | வாலிபனங்காடு |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 33 |

All accused are Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வாலிபனங்காட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 10 வருடங்களாக நாங்கள் PAP வாய்க்காலில் தண்எடுப்பது சம்பந்தமாக பிரச்சனை இருந்தது வந்தது. கடந்த 12.08.2021 ஆம் தேதியன்று மாலை 4–5 மணியளவில் PAP வாய்க்கால் அருகே தண்ணீர் எடுக்க சென்றபோது ஆஜர் எதிரிகள் காட்டின் நடுப்பகுதில் தண்ணீர் எடுத்துக்கொண்டிருந்தார்கள். எனது அப்பா ராமசாமி ஏன் நடுகாட்டில் எடுக்கிறீர்கள். நடுக்காட்டில் தண்ணீர் எடுக்க வேண்டாம் வேலி ஓரமாக எடுக்க சொல்லியுள்ளார். அதற்கு ஆஜர் எதிரிகள் வேலி ஓரமாக தண்ணீர் எடுத்தால் அதிக செலவாகும் என்று எனது தகப்பனார் ராமசாமியிடம் சொல்லி அப்படித்தாண்டா எடுப்ப கேனப்புண்ட என்று தகாத வார்த்தைகளால் திட்டி அருகில் கிடந்த கல்லை எடுத்து எனது அப்பாவின் தலையில் அடித்துவிட்டார்கள். பின்னர் அவர்கள் வேலியை தாண்டிவந்து ஒரு கட்டையால் எனது அப்பாவை அடித்தார்கள். **தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கட்டை மற்றும் இரண்டு கற்கள் சா.பொ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நானும் எனது அம்மாவும் அதை பார்த்து கேட்டு அவர்களை தடுத்த போது என்னையும் அடித்துவிட்டார்கள். பின்னர் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு எனது அப்பா ராமசாமி, அம்மா பேபி, பெரிய பாட்டி பழனியம்மாள் மற்றும் நான் அனைவரும் சிகிச்சைக்கு வந்தோம். பின்னர் எனது அப்பாவிற்கு மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். நானும்

அப்பாவும் அன்று இரவு வீட்டிற்கு வந்துவிட்டோம். மறுநாள் காலை வெள்ளகோவில் காவல் துறையினர் எனது அப்பாவிடம் வந்து விசாரித்து வாக்குமூலப் புகார் எழுதி கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

PAP வாய்க்கால் தண்ணீரானது எனது மூதாதையார் பத்திரப்படி காட்டின் நடுவில் வருகிறது என்றால் சரிதான். PAP வாய்க்கால் தண்ணீரானது ஒவ்வொரு காட்டிற்கும் சென்று வரும் என்றால் சரிதான். PAP வாய்க்கால் தண்ணீர் பாய்வதற்கு ஒவ்வொரு தோட்டத்திற்கும் தண்ணீர் பாய்ச்சும் முறை உள்ளது என்றால் சரிதான். தண்ணீர் வருவது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் சுழற்சி முறையில் வரும். கை வாய்க்கால் நிலத்துடன் ஒட்டி செல்லும் வாய்க்கால் என்று சொன்னால் சரிதான். ஒவ்வொரு காட்டிலும் தண்ணீர் வரும் சமயம் அடைப்புகள் இருந்தால் சுத்தம் செய்துவிடுவார்கள் என்றால் சரிதான். மண் வாய்க்கால் என்பதால் ஆடு மாடுகள் தோட்டத்தில் காடுகளுக்குள் சென்று வாய்க்கால்கள் மூடிவிடும் என்றால் சரிதான். எங்களது தோட்டத்தில் தண்ணீர் வரும் போது அது நடுப்பகுதியில்தான் வரும். தற்போது நாங்களே வாய்மொழியாக அதன் பாதையை மாற்றி அமைத்துக்கொண்டோம். எதிரிகள் தண்ணீர் பாய்ச்சும் முறை எதுவும் தவறு இல்லை. எதிரிகள் காட்டிற்கும் PAP வாய்க்கால் மூலம் தண்ணீர் செல்லும் என்றும் அவர்கள் காட்டிற்கு அடுத்து மற்ற நபர்களின் காடுகளுக்கு தண்ணீர் செல்லும் தற்போது வழக்கிற்காக மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. மண்வாய்க்கால் என்றால் சரிதான். எதிரிகள் எதற்காக எனது காட்டிற்குள் வந்தார்கள் என்றால் அடிப்பதற்காக வந்தார்கள். எதிரிகளுக்கும் எங்களுக்கும் வழக்கு சம்பந்தத்திற்கு முன்பாக 10 ஆண்டுகளாக பேச்சுவார்த்தை இல்லை. எனது அப்பாதான் எதிரிகள் காட்டிற்குள் தண்ணீர் வரும் முறையை தடுத்து எங்கள் காடுகளுக்கு உள்ளேயே எவ்வித அனுமதியும் இல்லாமல் நாங்களாகவே மண் வாய்க்காலை பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த முறையை நானும், எனது சித்தப்பாவும், எனது இரண்டு அண்ணன்கள், வாய்மொழியாக பிரித்துக்கொண்டோம். எனது அப்பா எதிரிகளிடம் தண்ணீரை காட்டின் நடுப்பகுதியில் கொண்டுசெல்லவேண்டாம் என்றும், காட்டின் ஓரப்பகுதயில் கொண்டு செல்ல சொன்னார். சம்பவத்தின்போது நான் காட்டிற்குள் இல்லை என்றும், சத்தம் கேட்டுத்தான் காட்டிற்கு சென்றேன் என்றும் சொன்னால் சரிதான். எதிரிகள்

காடுகளுக்கு தண்ணீர் செல்லக்கூடாது என்று சொல்லி எதிரிகளிடம் எனது அப்பா தகராறு செய்துகொண்டு தகாத வார்த்தையால் பேசி எதிரிகளை தாக்கிவிட்டு பின்யோசனையின்பேரில் மருத்துவசிகிச்சைக்கு சென்று அன்று இரவே வீடு திரும்பிவிட்டார் என்றும், காவல் துறையினர் எனது வீட்டிற்கே வந்து விசாரித்ததில் எனது அப்பா பொய்யான புகார் கொடுத்துவிட்டார் என்றும் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சான்று பொருட்களுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் சாட்சிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.13 18:44:22 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 19/2024 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | பேபி |
| Husband Name | : | ராமசாமி |
| Village | : | வாலிபனங்காடு |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 52 |

All accused are present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வாலிபனங்காட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 12.08.2021 ஆம் தேதியன்று மாலை 4–5 மணியளவில் எனது கணவரும் எனது மகனும் வெளியில் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரிகள் எனது மகன் மற்றும் எனது கணவரிடம் பேசி PAP வாய்க்கால் தண்ணீர் எடுப்பதில் பிரச்சனை ஏற்பட்டு ஆஜர் எதிரிகள் எனது கணவரை பார்த்து சாணா தாயோழி என்று தகாத வார்த்தைகளால் திட்டி அருகில் கிடந்த கல்லை எடுத்து எனது கணவரின் தலையில் அடித்தும் விட்டார்கள். பின்னர் ஒரு கட்டையால் எனது கணவரையும், எனது மகனையும் அடித்தார்கள். நான் தடுத்தபோது எனது காலிலும் அடித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கட்டை மற்றும் இரண்டு கற்கள்தான் சம்பவத்தன்று எதிரிகள் பயன்படுத்தியதாகும். பின்னர் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு எனது கணவர், நான், பெரிய பாட்டி பழனியம்மாள் மற்றும் மகன் அனைவரும் சிகிச்சைக்கு சென்றோம். பின்னர் எனது கணவருக்கு மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

PAP வாய்க்கால் தண்ணீரானது எனது மூதாதையார் பத்திரப்படி காட்டின் நடுவில் வருகிறது என்றால் சரிதான். PAP வாய்க்கால் தண்ணீரானது ஒவ்வொரு காட்டிற்கும்

சென்று வரும் என்றால் சரிதான். PAP வாய்க்கால் தண்ணீர் பாய்வதற்கு ஒவ்வொரு தோட்டத்திற்கும் தண்ணீர் பாய்ச்சும் முறை உள்ளது என்றால் சரிதான். தண்ணீர் வருவது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் சுழற்சி முறையில் வரும். கை வாய்க்கால் நிலத்துடன் ஒட்டி செல்லும் வாய்க்கால் என்று சொன்னால் சரிதான். ஒவ்வொரு காட்டிலும் தண்ணீர் வரும் சமயம் அடைப்புகள் இருந்தால் சுத்தம் செய்துவிடுவார்கள் என்றால் சரிதான். மண் வாய்க்கால் என்பதால் ஆடு மாடுகள் தோட்டத்தில் காடுகளுக்குள் சென்று வாய்க்கால்கள் மூடிவிடும் என்றால் சரிதான். எங்களது தோட்டத்தில் தண்ணீர் வரும் போது அது நடுப்பகுதியில்தான் வரும். தற்போது நாங்களே வாய்மொழியாக அதன் பாதையை மாற்றி அமைத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது கணவரிடம் தண்ணீர் முறையை நடுப்பகுதியில் வருவதை கேட்டார்கள். ஆனால் எனது கணவர் ஓரப்பகுதியில் வாய்க்கால் மூலம் எடுத்துக்சொன்னார்கள். PAP தண்ணீரானது ஒவ்வொரு காட்டிற்கும் முறைப்படி பாயும். எதிரி காட்டிற்கும் தண்ணீர் முறை உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது மூதாதையார் பத்திரப்படி எங்கள் காட்டிற்கு நடுப்பகுதியில்தான் தண்ணீர் வரும் என்றால் சரிதான். எதிரிகள் காட்டிற்கும் PAP வாய்க்கால் மூலம் தண்ணீர் செல்லும் என்றும் அவர்கள் காட்டிற்கு அடுத்து மற்ற நபர்களின் காடுகளுக்கு தண்ணீர் செல்லும் தற்போது வழக்கிற்காக மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. மண்வாய்க்கால் என்றால் சரிதான். நான் சத்தம் கேட்டுத்தான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்று தெரியாது என்றால் சரியல்ல. நான் எதிரிகள் கல்லை எடுப்பதை பார்த்துக்கொண்டிருந்தேன். எதிரிகள் எதற்காக எனது காட்டிற்குள் வந்தார்கள் என்றால் தண்ணீர் முறை எடுப்பது சம்பந்தமாக பேச வந்தார்கள். எதிரிகளுக்கும் எங்களுக்கும் வழக்கு சம்பந்தத்திற்கு முன்பாக 10 ஆண்டுகளாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணையில் 10 ஆண்டுகளாக பேச்சுவார்த்தை இல்லை என்று சொல்யுள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் தண்ணீர் விடமாட்டோம் என்று சொல்லித்தான் பிரச்சனை வந்தது. எனது மகனும் காயம் ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டார். நாங்கள் அனைவரும் அன்றைய தினமே காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு சென்று வீட்டிற்கு திரும்பிவிட்டோம் என்றால் சரிதான். எனது கணவர்தான் எதிரிகள் காட்டிற்குள் தண்ணீர் வரும் முறையை தடுத்து எங்கள் காடுகளுக்கு உள்ளேயே எவ்வித அனுமதியும் இல்லாமல்

நாங்களாகவே மண் வாய்க்காலை பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த முறையை நானும், எனது கொளுந்தானாரும், எனது இரண்டு மகன்கள், வாய்மொழியாக பிரித்துக்கொண்டோம். எனது கணவர் எதிரிகளிடம் தண்ணீரை காட்டின் நடுப்பகுதியில் கொண்டுசெல்லவேண்டாம் என்றும், காட்டின் ஓரப்பகுதயில் கொண்டு செல்ல சொன்னார். சம்பவத்தின்போது நான் காட்டிற்குள் இல்லை என்றும், சத்தம் கேட்டுத்தான் காட்டிற்கு சென்றேன் என்றும் சொன்னால் சரிதான். எதிரிகள் காடுகளுக்கு தண்ணீர் செல்லக்கூடாது என்று சொல்லி எதிரிகளிடம் எனது கணவர் தகராறு செய்துகொண்டு தகாத வார்த்தையால் பேசி எதிரிகளை தாக்கிவிட்டு பின்யோசனையின்பேரில் மருத்துவசிகிச்சைக்கு சென்று அன்று இரவே வீடு திரும்பிவிட்டார் என்றும், காவல் துறையினர் எனது வீட்டிற்கே வந்து விசாரித்ததில் எனது கணவர் பொய்யான புகார் கொடுத்துவிட்டார் என்றும் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சான்று பொருட்களுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் சாட்சிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.13 18:44:36 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 19/2024 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | பழனியம்மாள் |
| Husband Name | : | சண்முகம் |
| Village | : | வாலிப்பனக்காடு |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 80 |

Both Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வாலிபனங்காட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 12.08.2021 ஆம் தேதியன்று மாலை 4–5 மணியளவில் எனது மருமகனும் எனது பேரனும் வெளியில் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரிகள் எனது மருமகன் மற்றும் எனது பேரனிடம் பேசி PAP வாய்க்கால் தண்ணீர் எடுப்பதில் பிரச்சனை ஏற்பட்டு ஆஜர் எதிரிகள் எனது மகனை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டி அருகில் கிடந்த கல்லை எடுத்து எனது மருமகனின் தலையில் அடித்தும் விட்டார்கள். பின்னர் ஒரு கட்டையால் எனது மருமகனையும், எனது மகளையும், எனது பேரனையும், என்னையும் கையில் அடித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கட்டை மற்றும் இரண்டு கற்கள்தான் சம்பவத்தன்று எதிரிகள் பயன்படுத்தியதாகும். பின்னர் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு எனது மகள், நான், எனது மருமகன் மற்றும் பேரன் அனைவரும் சிகிச்சைக்கு சென்றோம். பின்னர் எனது மருமகனுக்கு மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

PAP வாய்க்கால் தண்ணீரானது எனது மூதாதையார் பத்திரப்படி காட்டின் நடுவில் வருகிறது என்றால் சரியல்ல. எங்கள் காட்டிற்கு மட்டும்தான் வருகிறது. எதிரிகள் காட்டிற்கு செல்வதில்லை. எதிரிகள் காடு எங்கள் காட்டிற்கு பக்கத்து காடு என்றால்

சரிதான். PAP வாய்க்கால் தண்ணீரானது ஒவ்வொரு காட்டிற்கும் சென்று வரும் என்றால் சரிதான். PAP வாய்க்கால் தண்ணீர் பாய்வதற்கு ஒவ்வொரு தோட்டத்திற்கும் தண்ணீர் பாய்ச்சும் முறை உள்ளது என்றால் சரிதான். தண்ணீர் வருவது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் சுழற்சி முறையில் வரும். கை வாய்க்கால் நிலத்துடன் ஒட்டி செல்லும் வாய்க்கால் என்று சொன்னால் சரிதான். ஒவ்வொரு காட்டிலும் தண்ணீர் வரும் சமயம் அடைப்புகள் இருந்தால் சுத்தம் செய்துவிடுவார்கள் என்றால் சரிதான். மண் வாய்க்கால் என்பதால் ஆடு மாடுகள் தோட்டத்தில் காடுகளுக்குள் சென்று வாய்க்கால்கள் மூடிவிடும் என்றால் சரிதான். எங்களது தோட்டத்தில் தண்ணீர் வரும் போது அது நடுப்பகுதியில்தான் வரும். தற்போது நாங்களே வாய்மொழியாக அதன் பாதையை மாற்றி அமைத்துக்கொண்டோம் என்றால் சரிதான். எதிரிகள் எனது மருமகனிடம் தண்ணீர் முறையை நடுப்பகுதியில் வருவதை கேட்டார்கள். ஆனால் எனது மருமகன் ஓரப்பகுதியில் வாய்க்கால் மூலம் எடுத்துக்கசொன்னார்கள். எனது மருமகனிடம் நடுபகுதியில் வரும் தண்ணீரை எதிரிகள் கேட்டார்கள். ஆனால் எனது மருமகன் விடமாட்டேன் என்று சொட்லிவிட்டார். நான் சத்தம் கேட்டுத்தான் வீட்டிற்குள் இருந்து வெளியே சென்று பார்த்தேன் என்றால் சரிதான்.

PAP தண்ணீரானது ஒவ்வொரு காட்டிற்கும் முறைப்படி பாயும். எதிரி காட்டிற்கும் தண்ணீர் முறை உள்ளது என்றால் இல்லை. எதிரிகள் காட்டிற்கும் PAP வாய்க்கால் மூலம் தண்ணீர் செல்லும் என்றும் அவர்கள் காட்டிற்கு அடுத்து மற்ற நபர்களின் காடுகளுக்கு தண்ணீர் செல்லும் தற்போது வழக்கிற்காக மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. மண்வாய்க்கால் என்றால் சரிதான். எதிரிகள் எதற்காக எங்கள் காட்டிற்குள் வந்தார்கள் என்றால் தண்ணீர் முறை எடுப்பது சம்பந்தமாக பேச வந்தார்கள். எதிரிகளுக்கும் எங்களுக்கும் வழக்கு சம்பந்தத்திற்கு முன்பாக 10 ஆண்டுகளாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் தண்ணீர் விடமாட்டோம் என்று சொல்லித்தான் பிரச்சனை வந்தது. எனது மருமகனும், பேரனும் காயம் ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள். நாங்கள் அனைவரும் அன்றைய தினமே காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு சென்று வீட்டிற்கு திரும்பிவிட்டோம் என்றால் சரிதான். எனது மருமகன்தான் எதிரிகள் காட்டிற்குள் தண்ணீர் வரும் முறையை தடுத்து எங்கள் காடுகளுக்கு உள்ளேயே எவ்வித

அனுமதியும் இல்லாமல் நாங்களாகவே மண் வாய்க்காலை பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த முறையை நாங்களும், எனது மருமகன், பேரன்கள், வாய்மொழியாக  பிரித்துக்கொண்டோம். எனது மருமகன் எதிரிகளிடம் தண்ணீரை காட்டின் நடுப்பகுதியில் கொண்டுசெல்லவேண்டாம் என்றும், காட்டின் ஓரப்பகுதயில் கொண்டு செல்ல சொன்னார். எதிரிகள் காடுகளுக்கு தண்ணீர் செல்லக்கூடாது என்று சொல்லி எதிரிகளிடம் எனது மருமகன் தகராறு செய்துகொண்டு தகாத வார்த்தையால் பேசி எதிரிகளை தாக்கிவிட்டு பின்யோசனையின்பேரில் மருத்துவசிகிச்சைக்கு சென்று அன்று இரவே வீடு திரும்பிவிட்டார் என்றும், காவல் துறையினர் எனது வீட்டிற்கே வந்து விசாரித்ததில் எனது மருமகன் பொய்யான புகார் கொடுத்துவிட்டார் என்றும் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சான்று பொருட்களுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் சாட்சிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.13 18:44:44 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்